பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
24 06 2025 TUESDAY 6.30 PM
<u>மாநிலச் செய்திகள்</u>

<u>தலைப்புச் செய்திகள்</u>

- நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- நாட்டில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், பயிர் வாரியான விழிப்புணர்வு இயக்கம் நாளை மறுநாள் தொடங்கப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

- தமிழகத்தில் மாம்பழ விலை வீழ்ச்சியை ஈடுசெய்ய சந்தை தலையீட்டுத் திட்டத்தை செயல்படுத்துமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

- அனுமதியற்ற தனி மனைகளை வரன்முறைப்படுத்த அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

- தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஓரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<<>>>>>

நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சியை உறுதி செய்ய வேண்டும் என்ற நோக்கில், மத்திய அரசு முனைப்புடன் செயல்பட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீநாராயண குரு, தேசப்பிதா மகாத்மா காந்தி ஆகியோர் குறித்த கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்ற பிரதமர், அனைவருக்கும் வீடு திட்டத்தின்கீழ், லட்சக்கணக்கான ஏழை எளிய பட்டியலின மற்றும் விளிம்பு நிலையில் உள்ள குடும்பங்கள் அனைத்து வசதிகளுடன் தரமான நிரந்தர வீடுகளை பெற்று பயனடைந்துள்ளதாகவும் கூறினார்.

இத்திட்டத்தில் வீடுகளை பெற்றவர்கள் கண்ணியத்துடன் வாழ்வாதாரத்தையும் பெருக்கி வருவதாக அவர் தெரிவித்தார்.

சமூக பொருளாதார திட்டங்களை செயல்படுத்துவதில் இந்தியா முன்னோடியாக திகழ்கிறது என்று குறிப்பிட்ட பிரதமர், இளைஞர்களின் திறனை மேம்படுத்த திறன் இந்தியா இயக்கம் போன்றவை வழிவகுத்துள்ளதாகவும், அவர்கள் சுயசார்பு நிலையை எட்டுவதற்கு உதவிடுவதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீநாராயண குருவின் ஆன்மிக சிந்தனைகளையும், தேசப்பிதா மகாத்மா காந்தியடிகளின் நன்னெறி கோட்பாடுகளையும் உள்ளடக்கிய மாண்புகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல இந்தியா நடவடிக்கை எடுத்து வருவதாக கூறினார்.

ஒரு உலகம் - ஒரு சுகாதார கட்டமைப்பு இயக்கம், ஒரு சூரியன் - ஒரு பூமி – ஒரு மின் கட்டமைப்பு மற்றும் ஜி-20 கருப்பொருளான ஒரு பூமி – ஒரே குடும்பம் - ஒரே எதிர்காலம் என்ற நமது பாரம்பரிய தத்துவார்த்தங்களை உலக அரங்கிற்கு எடுத்துச்செல்லும் முயற்சிகளை நாம் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

இவை அனைத்தும் வசுதெய்வ குடும்பகம் என்ற ஒரே புள்ளியில் இணைந்துள்ளதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

<<<<<>>>>>

நாட்டில் வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில், பயிர் வாரியான விழிப்புணர்வு இயக்கம் நாளை மறுநாள் தொடங்கப்பட உள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதை தெரிவித்த அவர், மத்தியப்பிரதேச மாநிலம் இந்தூரில் சோயாபீன் உற்பத்தியை பெருக்குவதற்கான விழிப்புணர்வு இயக்கம் தொடங்கப்பட உள்ளதாக கூறினார்.

இதில் விவசாயிகள், வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் பங்கேற்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இந்த இயக்கம் மேற்கொள்ளப்படும் என்று கூறிய அவர், பருத்தி, கரும்பு மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களுக்கான விழிப்புணர்வு இயக்கமும் தொடங்கப்பட உள்ளதாக குறிப்பிட்டார்.

இந்த இயக்கத்தின்போது, பயிர் சாகுபடி குறித்த தகவல்கள் சந்தைப்படுத்துதல் மற்றும் வேளாண் உற்பத்தியை ஊக்குவிக்க மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் உள்ளிட்டவை குறித்து விழிப்புணர்வு மேற்கொள்ளப்படும் என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் மாம்பழ விலை வீழ்ச்சியை ஈடுசெய்யும் வகையில், சந்தை தலையீட்டுத் திட்டத்தை செயல்படுத்துமாறு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின், மத்திய அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக, பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் ஆகியோருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், மாநிலத்தில் மாம்பழத்தின் விலை கிலோ ஐந்து ரூபாய்க்கும் குறைவாக வீழ்ச்சியடைந்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

மாம்பழக்கூழ் நிறுவனங்களிடமிருந்தும் தமிழக விவசாயிகளுக்கு நியாயமான விலை கிடைக்கப்பெறவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

மாம்பழச்சாறு பானங்கள் தயாரிப்பு நிறுவனங்கள் ‘FSSAI ’ தர நிலைகளை பின்பற்றுவதை உறுதி செய்யும் வகையில், வழிகாட்டு முறைகளை வெளியிடுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மாம்பழக்கூழுக்கான சரக்கு மற்றும் சேவை வரியை 12 சதவீதத்தில் இருந்து, ஐந்து சதவீதமாக குறைக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத்தில் மட்டுமின்றி, மாம்பழம் உற்பத்தி செய்யும் அனைத்து மாநிலங்களில் உள்ள விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு திரு மு.க.ஸ்டாலின், பிரதமருக்கும், வேளாண் அமைச்சருக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

தமிழகத்தில் கடந்த 2016-ஆம் ஆண்டு அக்டோபர் 20-ஆம் தேதிக்கு முன் அமைக்கப்பட்ட அனுமதியற்ற தனி மனைகளை வரன்முறைப்படுத்த அடுத்த மாதம் ஒன்றாம் தேதிமுதல் விண்ணப்பிக்கலாம் என்று மாநில அரசின் நகர்ப்புற ஊரமைப்பு இயக்ககம் தெரிவித்துள்ளது.

இதேபோன்று, மலையிடப்பகுதிகளில் உள்ள அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவுகளை வரன்முறைப்படுத்துவதற்கான விண்ணப்பங்களையும் இணையதளம் வாயிலாக சமர்ப்பிக்கலாம்.

tcponline.tn.gov.in என்ற இணையதளத்தில் இதற்கான விண்ணப்பங்களை பதிவிடலாம் என்றும் நகர்ப்புற ஊரமைப்பு இயக்குனர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள வைகை பாசனப்பகுதிகளுக்கு நாளை முதல் ஏழு நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிட மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

நீர்வளத்துறை செயலர் இன்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், நாளை தொடங்கி, ஜூலை ஒன்றாம் தேதிவரை ஆயிரத்து 251 மில்லியன் கனஅடி தண்ணீர் ராமநாதபுரம் மாவட்டத்தின் இரண்டு மற்றும் மூன்றாவது பாசனப் பகுதிகளுக்கு திறந்துவிடப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>

கிராமப்புறங்களில் உள்ள தொழில் முனைவோர் தங்களது உற்பத்திப்பொருட்களை உலக அளவில் சந்தைப்படுத்த மத்திய அரசு மின்னணு சந்தைப்படுத்துதல் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் இத்திட்டத்தில் இணைய விரும்பும் தொழில் முனைவோருக்காக நடத்தப்பட்ட சிறப்பு முகாமில், மகளிர் சுயஉதவிக்குழுவினர் மற்றும் பெண் தொழில் முனைவோர் 150-க்கும் மேற்பட்டோர் பதிவு செய்துள்ளனர்.

இந்த மின்னணு சந்தை தங்களுக்கு மிகவும் பயனளிப்பதாக பயனாளிகள் கூறுகின்றனர.

*(Voice Byte - பயனாளிகள் - 29 Sec.)*

<<<<<>>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியின் ஒரிரு இடங்களில் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 42 Sec.)*

<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

மதுரை மாநகராட்சி பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத்திட்ட செயல்பாட்டை அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் இன்று ஆய்வு செய்தார்.

----------------

கவியரசு கண்ணதாசனின் பிறந்தநாளையொட்டி, சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் உள்ள அவரது மணிமண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள சிலைக்கு மாநில அமைச்சர் திரு பெரியகருப்பன் மற்றும் அதிகாரிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

----------------

ஈரானில் சிக்கியுள்ள தூத்துக்குடி மாவட்ட மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்குமாறு அவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

----------------

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக தமிழக அரசால் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு உரிமைகள் திட்டத்திற்காக விவரங்கள் சேகரிக்க வரும் களப்பணியாளர்களுக்கு முழு ஒத்துழைப்பு வழங்குமாறு மாற்றுத்திறனாளிகள் மற்றும் பொதுமக்களை காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் கேட்டுக்கொண்டுள்ளார்.

-----------------

தருமபுரியில் நடைபெற்ற மலேரியா விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு சதீஷ் தொடங்கிவைத்தார்.

-------------------

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 27-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் கூட்டரங்கில் நடைபெறவுள்ளது.

--------------

சேலம் மாவட்டம் மேட்டூர் அணையின் 16 கண் மதகு பாலத்தில் நடைபெற்றுவரும் பராமரிப்புப்பணிகளை சென்னை ஐ ஐ டி கட்டிடவியல் துறை பேராசிரியர் அழகு சுந்தர மூர்த்தி இன்று ஆய்வு செய்தார்.

---------------

பராமரிப்புப்பணிகள் காரணமாக பெரம்பூர் - காட்பாடி வழியாக இயக்கப்படும் அகர்தலா – பெங்களூரு Humsafar எக்ஸ்பிரஸ் ரயில் இன்று முழுமையாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இறுதிநாளான இன்று இங்கிலாந்து இரண்டாவது இன்னிங்சில் சற்றுமுன்வரை 35 ஓவரில் விக்கெட் இழப்பின்றி 138 ரன் எடுத்துள்ளது.

'Leeds' —ல் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 465 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்சில் 471 ரன்னும், இரண்டாவது இன்னிங்சில் 364 ரன்னும் எடுத்துள்ளது.

---------------

தமிழ்நாடு பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் திருப்பூர் - கோவை அணிகள் இன்று மோதுகின்றன.

திருநெல்வேலியில் இன்றிரவு மணி 7.15-க்கு இப்போட்டி தொடங்குகிறது.

----------------

Czechia-ல் நடைபெறும் Ostrava Golden Spike 2025 தடகள போட்டியின் ஈட்டி எறிதல் பிரிவில் இந்தியாவின் நீரஜ் சோப்ரா இன்று பங்கேற்கிறார்.

<<<<<END>>>>>